Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 195 | உள்ளூர் - 14.07.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 195 | வெளியூர் - 15.07.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

**5 முக்கிய கிரக மாற்றங்கள்: 12 ராசிகளில் தாக்கங்கள்?** | **HPCL–ல் 116 நிரந்தர பணியிடங்கள்!** | **ஈரான் ஹிட்லிஸ்டில் உலக தலைவர்கள்?** | **ரஜினியின் 'தர்மன்' - அதிரடி ஆரம்பம்...!**

## ஈரானை கற்காலத்திற்கு கொண்டு வந்து விட்டோம்: டிரம்ப்!



வாஷிங்டன் டி.சி., ஜூலை. 14–

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறும்போது, ஹார்மூஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து பாதுகாப்பிற்காக ஈரான் மீது அமெரிக்கா புதிதாக தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், ஈரானின் அதிகாரத்துவம் பெருமளவில் அழிக்கப்பட்டு விட்டது என கூறினார்.

எடுத்துக்காட்டாக, ஈரானின் ராணுவத்திடம் 159 கப்பல்கள் இருந்தன. அவை தற்போது கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டு விட்டன. ஈரானிடம் 200 விமானங்கள் இருந்தன. அவை அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன. அவர்களுடைய ரேடார்கள், விமானங்களை தாக்கி அழிக்கும் கருவிகள், ஆயுதங்களை உருவாக்கும் திறன் என எல்லாவற்றையும் அழித்து விட்டோம். ஈரானின் 84 சதவீத ராணுவ தளவாடங்கள் அழிக்கப்பட்டு விட்டன. ஈரானின் பெருமளவு ஆயுதங்கள் அழிக்கப்பட்டு விட்டன. வான் பாதுகாப்பு கருவிகள் மற்றும் ஆயுத உள்கட்டமைப்புகள் தகர்க்கப்பட்டு விட்டன. 4 மாதங்களில் அவர்களை கற்காலத்திற்கு கொண்டு வந்து விட்டோம். தற்போது அவர்களிடம் மிகச்சில ஏவுகணைகளே உள்ளன.

குறைந்த அளவு திறனையே ஈரான் கொண்டுள்ளது. ஒரு வேறுபட்ட காலத்திற்கு அவர்களை கொண்டு வந்திருக்கிறோம். மத்திய கிழக்கில் ஈரான் அச்சுறுத்தலாக இருந்தது. இனி அவர்கள் எனக்கான அச்சுறுத்தலாக இருக்கமாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

## பிரதமர் மோடி ஜூலை 17-ம் தேதி பஞ்சாப் பயணம்!



சண்டிகர், ஜூலை. 14–

பஞ்சாப்பில் ஆம் ஆத்மி ஆட்சி நடைபெற்று வருகிறது. அம்மாநில முதல் – மந்திரியாக பகவந்த் மான் செயல்பட்டு வருகிறார்.

இதனிடையே, பஞ்சாப்பில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இத்தேர்தலில் பாஜக தனித்து களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் தற்போதே தேர்தல் பணிகளை தொடங்கி விட்டன.

பிரதமர் மோடி வரும் 17ம் தேதி பஞ்சாப் செல்கிறார். இந்த பயணத்தின்போது பல்வேறு ரெயில்வே திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். குறிப்பாக, மறுசீரமைக்கப்பட்ட ஜலந்தர் கண்டோன்மண்ட் ரெயில்வே நிலையத்தை பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார். ஜலந்தர் – வாரணாசி கூடுதல் ரெயில் சேவையையும் பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்.




தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 139 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டடங்களைத் திறந்து வைத்து, நவீன மருத்துவ உபகரணங்களின் பயன்பாட்டினையும் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் கோ.சு. அருண்ராஜ், தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தாய்மாமன் 'தங்க மோதிரம்' திட்டம் - டெண்டர்!



சென்னை, ஜூலை. 14–

தமிழ்நாடு அரசு 'தாய்மாமன் தங்க மோதிர' திட்டத்திற்கான தங்கத்தை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலின்போது தமிழக வெற்றிக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், 'மகளிர் நலன்' என்ற தலைப்பில் சில வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன.

அதன்படி, "தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தங்க மோதிரம், மென்மையான துணி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 'தாய்மாமன் சீர் பெட்டகம்' வழங்கப்படும்" என்ற வாக்குறுதி இடம்பெற்றிருந்தது. அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய், குழந்தைகளை கவுரவிக்கும் வகையில் தாய்மாமன் தங்க மோதிர திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், 'தாய்மாமன் தங்க மோதிர திட்டம்' என்ற பெயரில் அது அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தில் பயன்பெறுபவர், தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும், அரசு மருத்துவமனை மற்றும் அரசு சுகாதார மையங்களில் பிரசவிக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே இத்திட்டம் பொருந்தும்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்ட 751 உதவி மருத்துவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிய நிகழ்வில், மாற்றுத்திறனாளி பெண் உதவி மருத்துவர் பா. பிரசாந்திக்கு மேடையிலிருந்து கீழிறங்கி அவர் இருக்கும் இடத்திற்கே சென்று பணிநியமன ஆணையினை வழங்கினார்.

## போர் மேகம்...!

# ஈரான் தாக்குதல்... அமெரிக்கா பதிலடி... வளைகுடா முழுவதும் அவசர நிலை!

### உலக எண்ணெய் சந்தை மீண்டும் அதிர்ச்சி!!



ஈரான், ஜூலை. 14–

ஈரான் நாட்டின் ராணுவ அமைப்பான IRGC ஹார்முஸ் நீரிணையில் 2 எண்ணெய் கப்பல்களை முறைகேடான பணிகளைச் செய்வதாக அறிவித்து ஏவுகணைகளைக் கொண்டு தாக்கியுள்ளது. இந்த சூப்பர்டேங்கர் கப்பல்கள் திட்டமிட்டு தனது டிராகிங் சிஸ்டத்தின் அமைப்பைத் திட்டமிட்டு ஆஃப் செய்துள்ளது, ஈரான் ராணுவம் பல முறை எச்சரித்தும் கண்டுகொள்ளாமல் இயங்கிய காரணத்தால் ஈரான் தாக்குதல் நடத்தியதாக அறிவித்துள்ளது.

இந்த தாக்குதல் நடத்த சில நிமிடத்தில் ஐக்கிய அரபு அமீரகம் Mombasa மற்றும் Al Bahiyah ஆகிய இரண்டு கப்பல்கள் தாக்குதலுக்கு உள்ளானதாக அறிவித்துள்ளது. இந்த தாக்குதலில் இந்தியர் ஒருவரும், மற்ற நாடுகளைச் சேர்ந்த 8 பேரும் காயமடைந்துள்ளனர். ஈரானின் இந்த தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா ஈரான் நாட்டின் மீது சரமாரியாகத் தாக்குதலைத் துவங்கியுள்ளது. UAE நாட்டின் இரு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதைத் தொடர்ந்து இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக கிஷ் தீவு, ஜாம் தீவு, கேஷ்ம் தீவு, புஷேர் மற்றும் பந்தர் அப்பாஸ் ஆகிய பகுதிகளில் பெரும் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த 4 பகுதிகளும், எண்ணெய் ஏற்றுமதி மற்றும் வர்த்தக சந்தைக்கு முக்கியமான பகுதியாகும். அமெரிக்காவின் இந்த தாக்குதலுக்கு ஈரான் உடனடியாக பதில் தாக்குதல் செய்துள்ளது மூலம் அமெரிக்கா அதிர்ச்சி அடைந்துள்ளது. அமெரிக்காவின் தாக்குதலைத் தொடர்ந்து ஈரான் ராணுவம், குவைத் நாட்டில் இருக்கும் அமெரிக்கப் போர்க் கப்பல்களைத் தாக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்கப் பதில் தாக்குதல் நடத்தவில்லை என்றாலும் டிரம்ப் முக்கியமான அறிவிப்புகளை எடுத்துள்ளார்.

அடுத்த சில மணிநேரத்தில் ஈரான் துறைமுகத்திற்கு அமெரிக்காவின் கடற்படை முடக்கம் நடைமுறைக்கு வரும் என அறிவித்துள்ளார். இதன் மூலம் ஈரான் நாட்டின் கச்சா எண்ணெய்க்கு மொத்தமாக முடங்க உள்ளது,

இதேபோல் ஈரான் துறைமுகத்திற்கு எவ்விதமான கப்பலும் உள்ளேயும், வெளியேயும் நுழைய முடியாத நிலை மீண்டும் உருவாகும். இதேவேளையில் ஈரான் நாட்டின் மறுப்பக்கம் யெமன் நாட்டில் இருக்கும் ஹவுதிக்கள் அந்நாட்டின் சனா விமான நிலையத்தில் சவுதி அரேபியா தாக்குதல் நடத்தியுள்ளதாகவும், இதற்கு பதிலடியாக சவுதி மீது ஏவுகணை தாக்குதல் தொடப்பட்டு உள்ளதாக அறிவித்துள்ளது. இதனால் சவுதி அரேபியாவிலும் பதற்றம் அதிகரித்துள்ளது. இதுமட்டுமா, ஐரோப்பிய கமிஷன் மற்றும் பல்வேறு நாடுதள் சேர்ந்து காசாவுக்கு 1 பில்லியன் டாலர் மதிப்பிலான உதவிகள் காசாவுக்கு வரும் வேளையில், இஸ்ரேல் ராணுவம் திட்டமிட்டு காசா மற்றும் லெபனான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் ஒட்டுமொத்த வளைகுடா பகுதிகளும் தற்போது பெரும் பதற்றத்தில் உள்ளது.

## சிபிஎஸ்இ; பொதுத்தேர்வு இல்லை!




புதுடெல்லி, ஜூலை. 14–

நாடு முழுவதும் சிபிஎஸ்இ பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, 3வது மொழிப் பாடத்தை எடுத்துப் படித்தாலும் இந்தாண்டு பொதுத் தேர்வு நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்3 என்று கூறப்படும் 3வது மொழிப் பாடத்துக்கு, பள்ளிகள் நடத்தும் உள்நிலைத் தேர்வுகள் மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்படும் என்று சிபிஎஸ்இ அறிவித்துள்ளது.

மூன்றாவது மொழிப் பாடத்திட்டத்துக்கான தேர்வுகள், பள்ளி அளவிலான உள் மதிப்பீட்டு முறையில் மட்டுமே பதிவு செய்யப்படும். 3வது மொழிப்பாடத்தில் தேர்ச்சி பெறாத மாணவர்களும் 10ம் வகுப்புக்கு முன்னேற்றம் செய்யப்படுவார்கள். ஆனால், அதே மாணவர்கள் 10ஆம் வகுப்பு படிக்கும்போது மூன்றாவது மொழிப் பாடத்திலும் தேர்ச்சி பெற வேண்டியது அவசியமாகும்.

மேலும் சிறப்புக் குழந்தைகள், மாற்றுத்திறநாளிகளுக்கு 3வது மொழிப் பாடத்தைக் கற்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்கள் இந்திய மொழி ஒன்றை 3வது மொழியாக எடுத்துப் படிப்பதில் விலக்கு அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

10–ஆம் வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரை, சிபிஎஸ்இயின் தேர்ச்சி பெற்றோர் என்ற சான்றிதழ் பெறுவதற்கு, தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயம். 10–ஆம் வகுப்பில் 3வது மொழித் தேர்வில் தோல்வியடையும் மாணவர்களுக்கு, தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக மறுமதிப்பீட்டிற்கான (re–assessment) வாய்ப்பு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

தலையங்கம்

மதுரை மணி

செவ்வாய்க்கிழமை 14.07.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆனி மாதம் 30-ம் தேதி

# தங்கம் வாங்குவதில் சீனாவின் ‘டிவிஸ்ட்’... இந்தியா என்ன செய்யும்?



தங்கத்தை “பேப்பர் கோல்டு” வடிவில் வாங்குவதற்கு சீனா கடும் கட்டுப்பாடு விதித்துள்ளது. இதன் மூலம் உண்மையான தங்கம் (Physical Gold) வாங்குவதை ஊக்குவிக்கும் புதிய கொள்கையை அந்நாட்டு அரசு முன்னெடுத்துள்ளது. இந்த நடவடிக்கை உலக தங்கச் சந்தையில் புதிய விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீன மக்கள் இதுவரை தங்க நகைகள், நாணயங்கள், கட்டிகள் மட்டுமின்றி, தங்கத்தின் விலை ஏற்ற இறக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பேப்பர் கோல்டு, கோல்டு ETF, டெரிவேட்டிவ்ஸ் போன்ற முதலீடுகளிலும் அதிகளவில் ஈடுபட்டு வந்தனர். இதனால் உண்மையான தேவையை விட வர்த்தகச் சூதாட்டம் அதிகரித்து, தங்க விலையில் செயற்கையான ஏற்ற இறக்கங்கள் உருவாகியதாக சீன அரசு கருதுகிறது.

இதையடுத்து, சீனாவின் முக்கிய வங்கிகளான ICBC மற்றும் Postal Savings Bank of China உள்ளிட்டவை பொதுமக்களுக்கான பேப்பர் கோல்டு சேவைகளை கட்டுப்படுத்தத் தொடங்கியுள்ளன. ஆனால் தங்க நகைகள், தங்கக் கட்டிகள், தங்க நாணயங்கள் போன்ற உண்மையான தங்கத்தை வாங்குவதற்கு எந்த தடையும் விதிக்கப்படவில்லை.

இந்த நடவடிக்கையால் சீன மக்கள் இனி அதிகளவில் பிசிக்கல் கோல்டு வாங்குவார்கள் என்றும், இதன் மூலம் சீனாவின் தங்க இருப்பு மேலும் அதிகரிக்கும் என்றும் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். எதிர்காலத்தில் உலக தங்க விலை நிர்ணயத்தில் சீனாவின் செல்வாக்கு மேலும் உயரும் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகிறது.

இந்த நிலையில், உலகின் மிகப்பெரிய தங்க நுகர்வோர் நாடுகளில் ஒன்றான இந்தியா எந்த வகையான கொள்கையை பின்பற்றும் என்பது பொருளாதார வட்டாரங்களில் முக்கிய கேள்வியாக எழுந்துள்ளது. இந்தியாவில் தங்க முதலீட்டை ஊக்குவிக்கும் விதத்தில் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா அல்லது தற்போதைய நடைமுறையே தொடருமா என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# டிரம்ப்பின் 20 சதவீத வரி விதிப்பு அறிவிப்பு மிக அதிகம்; நாங்கள் நேர்மையாக இருப்போம் - ஈரான்!



தெஹ்ரான், ஜூலை. 14–

ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் டிரம்ப் அறிவித்த 20 சதவீத வரி விதிப்பு என்பது மிக அதிகம் என ஈரான் அறிவித்து உள்ளது. ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் தாக்குதல் தீவிரமடைந்து உள்ளது. ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியை எளிதில் கடந்து செல்லும் வகையில், வர்த்தக கப்பல்களின் போக்குவரத்து பாதுகாப்பிற்காகவும் மற்றும் கடல்சார் ஊழியர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுத்து நிறுத்தும் நோக்கிலும் ஈரானுக்கு எதிராக அதிகளவிலான தாக்குதல்களை அமெரிக்க படை தொடங்கியுள்ளது என அந்நாடு தெரிவித்து உள்ளது.

இதன் தொடர்ச்சியாக, ஈரானிய படைகளின் திறனை குறைக்கும் வகையில், அமெரிக்க பாதுகாப்பு படை தளபதியின் உத்தரவின்பேரில் இந்த தாக்குதல் நடத்தப்படுகிறது.

ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் வர்த்தக கப்பல் ஒன்றை ஈரான் தாக்கியதற்கு பொறுப்பேற்க செய்யும் வகையில் ஈரானிய படைகளுக்கு எதிராக இந்த தாக்குதல் நடந்துள்ளது என அமெரிக்கா தெரிவித்து உள்ளது.

ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் கப்பல்களை திடீரென ஈரான் கடுமையாக தாக்கியது. இதன் தொடர்ச்சியாக, அமெரிக்கா ஈரானை தாக்கி வருகிறது. இந்த பரபரப்பான சூழலில், ஈரானை இலக்காக வைத்து, ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் அமெரிக்க கடற்படை மீண்டும் முற்றுகையிடும் என டிரம்ப் அறிவித்து உள்ளார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் கடந்து செல்லும் கப்பல்களுக்கு 20 சதவீதம் கட்டணம் வசூலிப்போம் என கூறினார்.

இந்த சூழலில் ஈரானின் வெளியுறவு துறை மந்திரி சையது அப்பாஸ் அராக்சி வெளியிட்ட செய்தியில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முற்றிலும் சரியாக கூறியிருக்கிறார். ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் வர்த்தக கப்பல்கள் பாதுகாப்பாக பயணிப்பதற்கான சேவையை வழங்குவதற்காக கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். எப்போதும் ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியின் பாதுகாவலராக ஈரான் உள்ளது. தொடர்ந்து எப்போதும் அப்படியே இருக்கும். 20 சதவீதம் என்பது மிக அதிகம். நாங்கள் நேர்மையாக நடந்து கொள்வோம் என டிரம்ப்பின் வரி விதிப்புகளை சுட்டிக்காட்டி தெரிவித்து உள்ளார். இதனால், ஹார்மூஸ் ஜலசந்தி பகுதியில் ஈரான் மற்றும் அமெரிக்கா என இருவரில் ஒருவர் கட்டணம் வசூலிக்கும் தீவிர முடிவில் உள்ளது தெரிய வந்து உள்ளது.

# சென்னை மாநகராட்சி ஆணையருக்கு முதல்-அமைச்சர் விஜய் கடிதம்!



சென்னை, ஜூலை. 14–

சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரனுக்கு முதல்–அமைச்சரும், பெரம்பூர் எம்.எல்.ஏ.வுமான விஜய் கடிதம் எழுதி உள்ளார்.

பெரம்பூர் பகுதி மக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் திட்டங்களுக்காக, தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3 கோடியை ஒதுக்கீடு செய்யுமாறு, முதல்–அமைச்சர் ஜோசப் விஜய், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ். சமீரன் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். அதில்,

* எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, சிட்கோ நகர், எஸ்.எம். நகர், எம்.கே.பி. நகர் மற்றும் வியாசர்பாடி மேம்பாலச் சந்திப்பு உள்ளிட்ட முக்கிய இடங்களில், சிசிடிவி (CCTV), வைபை (Wi–Fi) மற்றும் 24 மணி நேரக் கண்காணிப்பு வசதிகளுடன் கூடிய 6 நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்படுவதன் மூலம் பெண்களின் பாதுகாப்பு வலுப்படுத்தப்படுகிறது.

* மேயர் கிருஷ்ணமூர்த்தி நகரில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு வளாகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

* கூடைப்பந்து, கிரிக்கெட், கபடி விளையாட்டு வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை மேம்படுத்த அம்பேத்கர் கலைக் கல்லூரிக்கு ரூ.25 லட்சம் நிதி வழங்கப்படும்.

* சத்தியமூர்த்தி நகரில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் டயாலிசிஸ் (சிறுநீரகச் சுத்திகரிப்பு) மையம் அமைக்கப்படும்.

* எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் ‘தற்காலிகப் பணியாளர்களுக்கான’ (Gig Workers) ஓய்வறை அமைக்கப்படும்.

* அம்பேத்கர் கல்லூரியில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் நூலகம் மற்றும் பயிலரங்கம் (Study Centre) உருவாக்கப்படும்.

* அங்கன்வாடி மையங்களுக்கு ரூ.50 லட்சம் மதிப்பிலான அத்தியாவசிய உபகரணங்கள் வழங்கப்படும்.

மேற்கூறிய அனைத்துப் பணிகளையும் உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று முதல்–அமைச்சர் விஜய் பரிந்துரைத்துள்ளார்.

இந்த திட்டங்கள் அனைத்தும் உடனடியாக தொடங்கப்பட உள்ளநிலையில், பெரம்பூர் பகுதி விரைவான வளர்ச்சியையும், மேம்பட்ட பொது வசதிகளையும் பெறும்.

# அகழாய்வுப் பணிகளைப் தவெக அரசும் தொடர வேண்டும் - மு.க.ஸ்டாலின்!





சென்னை, ஜூலை. 14–

திமுக தலைவரும், முன்னாள் முதல்–அமைச்சருமான மு.க.ஸ்டாலின் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–

தொடர்ந்து வெளிப்படும் தமிழர் தொன்மையின் தடங்களைப் பாதுகாப்போம்! தடங்கல் எதுவரினும், வரலாற்று உண்மையை நிறுவுவோம்! திராவிட மாடல் அரசு தொடங்கிய அகழாய்வுப் பணிகளைப் புதிய அரசும் தொடர்ந்து மேற்கொண்டு, தமிழர் வரலாற்றுத் தடங்களை உலகறியச் செய்ய வேண்டும்.

தமிழரின் வரலாற்றையும் நமது பண்பாட்டையும் குறைத்துக் கூறியும், சிதைத்து எழுதியும் வருவதோடு, வரலாற்றைத் திரிபுவாதங்களால் திசைதிருப்பும் சூழ்ச்சிகளும் அரங்கேறும் காலத்தில், தமிழ்த்தொன்மை உண்மைச் சான்றுகளோடு வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுதான் கீழடி, பொருநை, இரும்பின் தொன்மை!

மண்ணுக்குள்ளும் ஆழ்கடலுக்குள்ளும் மறைந்திருக்கும் இன்னும் பல கீழடிகளை மேலே கொண்டு வருவோம். இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாற்றினைத் தெற்கிலிருந்து தொடங்கி எழுதுவோம்! வரலாற்றில் பெருமிதம் கொள்வதோடு, புதிய வரலாற்றைப் படைத்திடவும் பலம் பெறுவோம்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# லண்டனில் பேரன் இன்பநிதியின் பட்டமளிப்பு விழாவில் மு.க. ஸ்டாலின்!





லண்டன், ஜூலை. 14–


லண்டனில் தனது பேரன் இன்பநிதியின் பட்டமளிப்பு விழாவில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் கலந்துகொண்டுள்ளார்.

மு.க. ஸ்டாலினின் பேரனும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் மகனுமான இன்பநிதி, பிரிட்டனின் மான்செஸ்டர் நகரில் விளையாட்டு மேம்பாடு தொடர்பான உயர்கல்வி பயின்று வருகிறார். அவரது பட்டமளிப்பு விழா இந்த மாதம் நடைபெறவுள்ள நிலையில், அதில் பங்கேற்பதற்காக மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்தினருடன் லண்டன் சென்றுள்ளார். மு.க.ஸ்டாலினுடன், அவரது மனைவி துர்கா, உதயநிதி ஸ்டாலின், அவரது மனைவி கிருத்திகா மற்றும் ஸ்டாலின் மருமகன் சபரீசன் குடும்பத்தினரும் சென்றுள்ளனர். சுமார் 10 நாள்கள் லண்டனில் ஓய்வெடுக்கவும் ஜூலை 20–ஆம் தேதிக்குப் பிறகு அவர் சென்னை திரும்புவார் என திமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் லண்டனில் இன்பநிதியின் பட்டமளிப்பு விழாவில் மு.க. ஸ்டாலின், அவரது மனைவி துர்கா ஸ்டாலின் கலந்துகொண்டுள்ளனர்.

மேலும் இன்பநிதியை மு.க. ஸ்டாலின் கட்டியணைத்து வாழ்த்துத் தெரிவித்த புகைப்படமும் இணையத்தில் வைரலாகி வருகிறது.

# அமெரிக்காவில் பரவும் ‘சைக்ளோஸ்போரியாசிஸ்’ ஒட்டுண்ணித் தொற்று: 31 மாநிலங்கள் பாதிப்பு!



அமெரிக்கா, ஜூலை. 14–

அமெரிக்காவில் ‘சைக்ளோஸ்போரியாசிஸ்’ (Cyclospo–riasis) என்ற கடுமையான குடல் சார்ந்த பாக்டீரியா/ஒட்டுண்ணித் தொற்று வேகமாகப் பரவி வருகிறது.

இதுவரை நாட்டின் 31 மாநிலங்களில் சுமார் 3,000–க்கும் மேற்பட்ட மக்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில சுகாதாரத் துறைகள் தெரிவித்துள்ளன. இதில் 86–க்கும் மேற்பட்டோர் கடுமையான பாதிப்புகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**மிக மோசமாக பாதிக்கப்பட்ட மிச்சிகன் மாநிலம்:**

இந்தத் தொற்றால் மிச்சிகன் மாநிலம் மிகக் கடுமையான பாதிப்பைச் சந்தித்துள்ளது. அங்கு மட்டுமே 1,562 வழக்குகள் பதிவாகியுள்ளன. வழக்கமாக அங்கு ஆண்டுக்கு 40 முதல் 50 வழக்குகள் மட்டுமே பதிவாகும் நிலையில், இந்த திடீர் உயர்வு சுகாதாரத் துறை அதிகாரிகளை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. இது தவிர ஒஹாயோ, நியூயார்க், இல்லினாய்ஸ், டெக்சாஸ் ஆகிய மாநிலங்களிலும் பாதிப்பு அதிகமாக உள்ளது.

**சைக்ளோஸ்போரியாசிஸ் என்றால் என்ன? இதன் அறிகுறிகள் யாவை?**

இது ‘சைக்ளோஸ்போரா’ என்ற நுண்ணிய ஒட்டுண்ணியால் பரவும் ஒரு உணவுவழி நோயாகும். பாதிக்கப்பட்ட நபர்களுக்குப் பின்வரும் அறிகுறிகள் ஏற்படும்:

*கட்டுப்படுத்த முடியாத வெடிக்கும் தன்மையுடைய வயிற்றுப்போக்கு

* கடுமையான சோர்வு மற்றும் உடல் வலி

* வயிற்றுப் பிடிப்பு, வாயுத் தொல்லை மற்றும் குமட்டல்

* பசியின்மை மற்றும் சிலருக்கு லேசான காய்ச்சல்

பொதுவாக அசுத்தமான உணவை உட்கொண்ட ஒரு வாரத்திற்குப் பிறகுதான் தெரியவரும். இதற்கு முறையான ஆன்டிபயாடிக் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், இந்த பாதிப்பு பல வாரங்களுக்கு நீடிக்கலாம்.

**தொற்று பரவுவது எப்படி?**

இந்த ஒட்டுண்ணி ஒரு மனிதரிடமிருந்து மற்றொரு மனிதருக்கு நேரடியாக சுவாசப் பாதை வழியாகவோ அல்லது தொடுதல் மூலமாகவோ பரவாது.

பெரும்பாலும் அசுத்தமான பழங்கள், காய்கறிகள் மற்றும் மூலிகைகள் (கொத்தமல்லி, கீரை வகைகள், ரஸ்ப்பெர்ரி பழங்கள் போன்றவை) மூலமாகவே இது பரவுகிறது. இந்த ஒட்டுண்ணிகள் பழங்கள் மற்றும் காய்கறிகளின் மேற்புறத்தில் ஒட்டிக்கொள்வதால், சாதாரணத் தண்ணீரைக் கொண்டு எளிதில் கழுவி அவற்றை அகற்ற முடியாது. உணவைச் சமைப்பது மட்டுமே இந்த ஒட்டுண்ணியை அழிக்க ஒரே வழியாகும்.

**தீவிர விசாரணையில் சிடிசி:**

அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் (CDC) மற்றும் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) ஆகியவை இணைந்து இந்தத் தொற்றின் மூலத்தைக் கண்டறிய தீவிரமாக முயன்று வருகின்றன.


எனினும், பல்வேறு மாநிலங்களில் ஏற்பட்டுள்ள இந்தத் தொற்றுப் பரவல்களுக்கு இடையே தொடர்பு உள்ளதா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்றுசிடிசிதெரிவித்துள்ளது. மேலும், பாதிக்கப்பட்டவர்கள் பல நாட்களுக்கு முன்பு சாப்பிட்ட உணவுகளை நினைவுகூர்வதில் சிரமம் இருப்பதால், தொற்றுக்கான சரியான உணவுப் பொருளைக் கண்டறிவது சவாலாக உள்ளது.

**பொதுமக்கள் தற்காத்துக் கொள்வது எப்படி?**

சுகாதாரத் துறை அதிகாரிகள் பொதுமக்களுக்குச் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட, ஏற்கனவே நறுக்கி ‘ப்ரீ–வாஷ்’ செய்யப்பட்ட கீரை மற்றும் சாலட் கலவைகளை வாங்குவதைத் தவிர்த்து, முழுமையான காய்கறிகளை வாங்கிப் பயன்படுத்தவும்.

கொத்தமல்லி, புதினா போன்ற இலைகளை ஓடும் குழாய் நீரில் நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும். காய்கறிகள் மற்றும் பழங்களை நறுக்கும் பலகைகள் மற்றும் சமையலறை மேடைகளை சோப்பு நீர் கொண்டு சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

தற்போது கோடைகாலம் என்பதால் புதிய காய்கறிகள் மற்றும் பழங்களின் நுகர்வு அதிகமாக இருக்கும். எனவே, மக்கள் விழிப்புணர்வுடனும், சுகாதாரத்துடனும் செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.





# ஜூலை 15 முதல் 5 முக்கிய கிரக மாற்றங்கள்: 12 ராசிகளின் வாழ்க்கையில் தாக்கங்கள்?



ஜோதிட சாஸ்திரத்தில் கிரகங்களின் பெயர்ச்சி, அஸ்தமனம், வக்ர நிலை போன்ற மாற்றங்கள் மனிதர்களின் வாழ்க்கையில் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. அந்த வகையில், ஜூலை 15 முதல் ஜூலை மாத இறுதி வரை நடைபெற உள்ள ஐந்து முக்கிய கிரக மாற்றங்கள் ஜோதிட ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்துள்ளன. இந்தக் காலகட்டத்தில் குரு அஸ்தமனம், சூரியன் கடக ராசிக்கு பெயர்ச்சி, செவ்வாய் நட்சத்திரப் பெயர்ச்சி, சனி வக்ர நிலை மற்றும் சூரியன்குரு சேர்க்கை ஆகியவை நிகழவுள்ளன. இந்த மாற்றங்கள் 12 ராசிகளின் தொழில், வேலை, வருமானம், குடும்பம், கல்வி, ஆரோக்கியம் மற்றும் பொருளாதார நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தும் என ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

**ஜூலை 15 குரு அஸ்தமனம்**

தேவகுருவாக போற்றப்படும் குரு பகவான் அறிவு, கல்வி, திருமணம், குழந்தைப் பாக்கியம், செல்வம், பதவி உயர்வு மற்றும் ஆன்மிக முன்னேற்றத்தின் காரகராக கருதப்படுகிறார். ஜூலை 15 முதல் குரு அஸ்தமன நிலையை அடைவதால் திருமணம், வீடு வாங்குதல், புதிய தொழில் தொடங்குதல், பெரிய முதலீடுகள், முக்கிய ஒப்பந்தங்கள் போன்ற சுப காரியங்களை அவசரமாக மேற்கொள்ளாமல் இருப்பது நல்லது என ஜோதிட மரபில் கூறப்படுகிறது. இந்தக் காலத்தில் முக்கிய முடிவுகளை நிதானமாக எடுப்பது பல நன்மைகளைத் தரும்.

**ஜூலை 16 சூரியன் கடக ராசிக்கு பெயர்ச்சி**

சூரியன் மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்கு பெயர்ச்சி அடைகிறார். கடகத்தில் ஏற்கனவே இருக்கும் குருவுடன் சூரியன் இணைவதால் அதிகாரம், தலைமைத்துவம், அரசு தொடர்பான பணிகள் மற்றும் நிர்வாக பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு பதவி உயர்வு, புதிய பொறுப்புகள் மற்றும் வருமான உயர்வு கிடைக்கலாம். அதே நேரத்தில் குடும்பச் செலவுகள், மருத்துவச் செலவுகள் மற்றும் பொறுப்புகளும் அதிகரிக்கக்கூடும்.

**ஜூலை 24 செவ்வாய் நட்சத்திரப் பெயர்ச்சி**

செவ்வாய் பகவான் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் நுழைவதால் தைரியம், போட்டித் திறன், செயல்திறன் மற்றும் முடிவெடுக்கும் ஆற்றல் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. அரசு வேலைக்கு தயாராகும் மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், தொழில் முனைவோர் மற்றும் நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு இந்த மாற்றம் சாதகமான வாய்ப்புகளை உருவாக்கலாம். இருப்பினும் கோபம், அவசரம் மற்றும் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**ஜூலை 27 சனி வக்ர நிலை**

கர்ம பலன்களை வழங்கும் சனி பகவான் மீன ராசியில் வக்ர நிலையைத் தொடங்குகிறார். சனியின் வக்கிர இயக்கம் காரணமாக தாமதங்கள், பணிச்சுமை, கூடுதல் பொறுப்புகள், செலவுகள் மற்றும் மன அழுத்தம் சிலருக்கு அதிகரிக்கலாம். அதே நேரத்தில் கடின உழைப்புக்கு தகுந்த பலன் கிடைக்கும் காலமாகவும் இது அமையும். பழைய நிலுவைப் பணிகளை முடிக்கவும், கடன் மேலாண்மையில் கவனம் செலுத்தவும் இந்த காலம் ஏற்றதாக கருதப்படுகிறது.

ஜூலை 29 சூரியன்குரு சேர்க்கை

சூரியனும் குருவும் ஒரே ராசியில் இணைவதால் சில ராசிக்காரர்களுக்கு தொழில் முன்னேற்றம், புதிய வேலைவாய்ப்பு, வெளிநாட்டு வாய்ப்பு, அரசு ஆதரவு மற்றும் பொருளாதார முன்னேற்றம் கிடைக்கலாம். அதே நேரத்தில் அகந்தை, அவசர முடிவுகள் மற்றும் தேவையற்ற செலவுகளைத் தவிர்க்க வேண்டும் என்று ஜோதிடர்கள் அறிவுறுத்துகின்றனர்.

**12 ராசிகளுக்கு பொதுவான பலன்கள்**

இந்த கிரக மாற்றங்களின் தாக்கம் ஒவ்வொரு ராசிக்கும் வெவ்வேறு விதமாக இருக்கும். மேஷம், கன்னி, விருச்சிகம் ஆகிய ராசிக்காரர்களுக்கு தொழில் மற்றும் வருமானத்தில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. ரிஷபம், தனுசு, கும்பம் ராசிக்காரர்கள் பணப் பரிவர்த்தனை மற்றும் முதலீடுகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கடகம், சிம்மம், மகரம் ஆகிய ராசிக்காரர்களுக்கு குடும்பப் பொறுப்புகள் மற்றும் பணிச்சுமை அதிகரிக்கலாம். மீனம் மற்றும் துலாம் ராசிக்காரர்கள் ஆரோக்கியம், மன அமைதி மற்றும் குடும்ப ஒற்றுமையில் கவனம் செலுத்துவது நல்லது.

ஜோதிட நிபுணர்களின் கருத்துப்படி, இந்த காலகட்டத்தில் பொறுமை, நிதானம், திட்டமிட்ட செயல்பாடு மற்றும் செலவுக் கட்டுப்பாடு ஆகியவற்றை கடைப்பிடிப்பவர்கள் பல சவால்களை எளிதாக சமாளிக்க முடியும். முக்கிய முதலீடுகள், வேலை மாற்றம், தொழில் விரிவாக்கம் மற்றும் குடும்பமுடிவுகளைஎடுப்பதற்குமுன்புஅனுபவமுள்ளவர்களின் ஆலோசனையைப் பெறுவது நல்லது என்றும் வலியுறுத்தப்படுகிறது.

**குறிப்பு:** மேலே குறிப்பிடப்பட்டுள்ள பலன்கள் பாரம்பரிய ஜோதிடக் கணிப்புகளின் அடிப்படையில் வழங்கப்பட்டவை. இவை அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட முன்னறிவிப்புகள் அல்ல; தனிநபர் நம்பிக்கைகளின் அடிப்படையில் அணுகப்பட வேண்டியவை.




## உடல் பருமன் நோய்களின் வாசல்!




உடல் பருமன் என்பது வெறும் தோற்றத்தை மட்டுமே பாதிக்கும் பிரச்சினை அல்ல. அது உடலின் பல்வேறு உறுப்புகளின் செயல்பாட்டை பாதித்து, பல தீவிர நோய்களுக்கு வழிவகுக்கும் முக்கிய உடல்நல சவாலாக மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். தவறான உணவுப் பழக்கம், அதிக கலோரி கொண்ட துரித உணவுகள், உடற்பயிற்சியின்மை, நீண்ட நேரம் அமர்ந்து வேலை செய்வது, மனஅழுத்தம் மற்றும் போதிய தூக்கமின்மை போன்ற காரணங்களால் உடல் எடை அதிகரிக்கிறது.


உடலில் அதிகப்படியான கொழுப்பு சேரும்போது வளர்சிதை மாற்றத்தில் பாதிப்பு ஏற்பட்டு, நாள்பட்ட அழற்சி உருவாகும் வாய்ப்பு அதிகரிக்கிறது. இதன் விளைவாக உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நோய், கொழுப்பு கல்லீரல், பக்கவாதம் உள்ளிட்ட பல நோய்களின் அபாயம் அதிகரிக்கிறது. மேலும், மார்பகப் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், கல்லீரல் புற்றுநோய் போன்ற சில வகை புற்றுநோய்கள் ஏற்படும் வாய்ப்பும் உடல் பருமனால் அதிகரிக்கக்கூடும் என்று மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இருப்பினும், உடல் பருமன் உள்ள அனைவருக்கும் புற்றுநோய் ஏற்படும் என்று அர்த்தமல்ல; இது ஆபத்தை அதிகரிக்கும் காரணிகளில் ஒன்றாக மட்டுமே கருதப்படுகிறது.

எனவே, சத்தான உணவுகளைத் தேர்வு செய்து, தினமும் குறைந்தது 30 நிமிடங்கள் உடற்பயிற்சி மேற்கொள்வது, போதுமான தூக்கம் பெறுவது மற்றும் உடல் எடையை சீராக பராமரிப்பது மிகவும் அவசியம். உடல் எடை தொடர்ந்து அதிகரித்தாலோ அல்லது உடல்நலத்தில் மாற்றங்கள் தென்பட்டாலோ தாமதிக்காமல் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது. ஆரம்பத்திலேயே கவனம் செலுத்தினால் பல தீவிர நோய்களைத் தடுக்க முடியும்.

## ஒன்றிய அலுவலக திறப்பு விழா!




தமிழக வெற்றி கழகம் திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஜி கே சங்கர் தலைமையில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் ராம்குமார் முன்னிலையில் பல்லடம் வடக்கு ஒன்றிய செயலாளர் ராஜா பில்வாங்கிகள் ஏற்பாட்டில் பல்லடம் வடக்கு ஒன்றிய தலைமை அலுவலகம் திறக்கப்பட்டது மேலும் செங்கோட பாளையம் பால சுப்பிரமணியன். ரவி மற்றும் நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் கிருஷ்ணாபுரம் பஞ்சாயத்து காமநாயக்கன்பாளையம் ஊரை சேர்ந்த மாணவர்கள் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவிக்கு மேற்படிப்பிற்கு படிப்பதற்கு ரொக்க பணம் 5000 ரூபாய் நன்கொடை வழங்கப்பட்டது மேலும் கலந்து கொண்ட 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது இதில் மாவட்ட நிர்வாகிகள் நகர நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகிகள் கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்...



## சினிமா துளிகள்..!

## ரஜினியின் 'தர்மன்' –அதிரடி ஆரம்பம்...!




'தர்மன்' படம் தொடர்பான புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, தற்போது சென்னையில் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும், படத்தின் பெரும்பாலான காட்சிகளை சென்னையிலேயே படமாக்க படக்குழு திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது நடன இயக்குநர் சாண்டி மாஸ்டர் அமைப்பில் உருவாகும் ரஜினிகாந்தின் பிரமாண்ட அறிமுகப் பாடல் மற்றும் அதிரடி சண்டைக் காட்சிகளின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனால் 'தர்மன்' திரைப்படம் குறித்த எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் மேலும் அதிகரித்துள்ளது. படத்தின் அடுத்தகட்ட அப்டேட்களுக்காக ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

# ஜூலை.16-ல் தமிழக அமைச்சரவைக் கூட்டம்!





சென்னை, ஜூலை. 14–
தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் ஜூலை 16 அன்று, சென்னை தலைமை செயலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் அல்லது ஆகஸ்ட் முதல் வாரத்தில் 2026–27 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல் இருக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அதில் இடம்பெறும் திட்டங்கள், அறிவிப்புகள் குறித்து விவாதிக்கவும், ஒப்புதல் அளிக்கவும் அமைச்சரவை கூடுவதாக தெரிகிறது.

தவெக அரசு தேர்தலின் போது அறிவித்த முக்கிய வாக்குறுதிகளைச் செயல்படுத்துவது குறித்த ஆலோசனைகளும் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பட்ஜெட்டில் பொதுமக்களை கவரும் வகையிலான அறிவிப்புகள், திட்டங்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பதவியேற்ற ஓராண்டுக்குள் உக்ரைன் பிரதமர் ராஜினாமா!



உக்ரைன், ஜூலை.14–
உக்ரைன் பிரதமர் யூலியா ஸ்விரிடென்கோ, ஓராண்டுக்குள் ராஜினாமாவை அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், 'உக்ரைன் வரலாற்றின் மிகக் கடினமான காலகட்டத்தில் அரசை வழிநடத்தியதைப் பெருமையாகக் கருதுகிறேன். நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கவும், நீதியான அமைதியை நிலைநாட்டவும் தொடர்ந்து பாடுபடத் தயாராக இருக்கிறேன்' எனக் குறிப்பிட்டார். பதவிய விலகிய யூலியா ஸ்விரிடென்கோவுக்கு, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நட்பு நாடுகளுடனான உறவை வலுப்படுத்தும் புதிய மற்றும் உயரிய பொறுப்பு வழங்கப்பட உள்ளதாக ஸெலென்ஸ்கி தெரிவித்தார். இந்த அரசு மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, வெளியுறவுக் கொள்கையின் முக்கியப் பிரிவுகள் மற்றும் நாட்டின் சட்ட அமலாக்கத் துறையின் உயர்நிலைப் பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் ஸெலென்ஸ்கி கூறியுள்ளார்.

ரஷியாவுடன் போர் தொடங்கியதில் இருந்து உக்ரைன் அரசு மேற்கொள்ளும் 4–ஆவது பெரிய மறுசீரமைப்பு இதுவாகும். புதிய வியூகங்கள் மற்றும் அனுபவமிக்க நபர்கள் மூலம் நாட்டின் நிர்வாகத்துக்கு கூடுதல் வேகம் கிடைக்கும் என்று அதிபர் தரப்பில் நம்பப்படுகிறது.

இதனிடையே, ரஷியாவில் கடுமையான எரிபொருள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு காரணமாக இருந்த, அந்நாட்டின் எரிபொருள் கட்டமைப்புகள் மீதான ட்ரோன் தாக்குதல்களை உக்ரைன் தொடர்ந்து தீவிரப்படுத்தி வருகிறது.

# தவெக எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசிய வழக்கு: விசாரணையை கையில் எடுத்த அமலாக்கத்துறை!




சென்னை, ஜூலை. 14–
தவெக எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசிய வழக்கில் ஹவாலா பணம் கைமாறி இருப்பதாகக் காவல்துறை தெரிவித்ததைத் தொடர்ந்து, இவ்வழக்கை அமலாக்கத்துறை தாமாக முன்வந்து விசாரணையைக் கையில் எடுத்துள்ளது. இந்த வழக்கில் கணக்கில் காட்டப்படாத ரூ.50 லட்சத்திற்கும் அதிகமான பணம் பறிமுதல் செய்யப்பட்டது குறித்தும் அமலாக்கத்துறை விசாரணை நடத்த உள்ளது.

மேலும், இந்த வழக்கில் செந்தில் பாலாஜி அவரது சகோதரர் இருவரும் முன் ஜாமின் பெற்றுள்ள நிலையில் அமலாக்கத்துறை தீவிர விசாரணை நடத்தி வருகிறது. தவெக எம்.எல்.ஏ.க்களிடம் பேரம் பேசிய வழக்கு விசாரணையை அமலாக்கத்துறை கையில் எடுத்திருப்பது தமிழக அரசியல் களத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையில் தவெக எம்எல்ஏவிடம் பேரம் பேசிய விவகாரத்தில் மதுரையை சேர்ந்த 4 பேரிடம் திருவல்லிக்கேணி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரூ. 100 கோடி மோசடி! திமுக நிர்வாகி மீது பாய்ந்த குண்டர் தடுப்புச் சட்டம்!!



சென்னை, ஜூலை. 14–
தனியார் பள்ளி நிர்வாகிகளிடம் ரூ. 100 கோடி மோசடி செய்ததாக கைது செய்யப்பட்ட திமுக செய்தித் தொடர்பு துணைத் தலைவர் பி.டி. அரசகுமார் மீது குண்டர் தடுப்புச் சட்டம் பதிவு செய்ய சென்னை மாநகரக் காவல் ஆணையர் அமல்ராஜ் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை தியாகராய நகரில் செயல்படும் தமிழ்நாடு தனியார் பள்ளி சங்கங்களின் கூட்டமைப்பின் செயலர் இளங்கோவன், சென்னை பெருநகர காவல் துறையின் மத்திய குற்றப்பிரிவில் அண்மையில் புகார் அளித்தார். அதில், கடந்த 2 ஆண்டுகளாக தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளி நிர்வாகிகள் தங்கள் பள்ளிகளுக்கான அங்கீகாரம், தரம் உயர்த்துதல், திட்ட அனுமதி ஆகியவற்றைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இதைப் பயன்படுத்தி சென்னை சாலிகிராமத்தில் 'தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்கம்' என்ற பெயரில் பதிவு செய்யப்படாத சங்கத்தை நடத்தி வரும் திமுக செய்தித் தொடர்பு துணைத் தலைவர் பி.டி. அரசகுமார், தனக்குள்ள அரசியல், அதிகார தொடர்புகளை பயன்படுத்தி தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், பள்ளித் தரம் உயர்வு, டிடிசிபி, சிஎம்டிஏ அனுமதிகள், பிற சட்டபூர்வ அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறியுள்ளார்.

இதை நம்பி தமிழகம் முழுவதும் உள்ள பல தனியார் பள்ளிகளின் நிர்வாகிகள் அவரிடம் பணம் கொடுத்துள்ளனர். பணம் பெற்றுக்கொண்ட பி.டி. அரசகுமார், உறுதியளித்தபடி அனுமதிகள் பெற்றுத் தராமலும், பணத்தைத் திருப்பித் தராமலும் சுமார் ரூ. 100 கோடி மோசடி செய்துள்ளார். எனவே, இந்த மோசடியில் ஈடுபட்ட பி.டி. அரசகுமார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

அந்தப் புகாரின் அடிப்படையில் மத்திய குற்றப்பிரிவு போலீஸார், சென்னை சாலிகிராமம் மெஜஸ்டிக் காலனியில் வசித்து வரும் பி.டி. அரசகுமாரை (59) 2 வாரங்களுக்கு முன்பு கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட பி.டி. அரசகுமாரை 3 நாள்களில் போலீஸ் காவலில் விசாரணை நடத்த அனுமதி வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த் நிலையில், அரசகுமார் மீது, 50க்கும் மேற்பட்டோர் புகார் அளித்து இருப்பதால், சென்னை மாநகரக் காவல் ஆணையர் அமல்ராஜ் உத்தரவின்படி, பி.டி. அரசகுமாரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் காவல் துறையினர் கைது செய்தனர்.

## ஒட்டன்சத்திரத்தில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு இரட்டையர் இறகுபந்து போட்டி!



ஒட்டன்சத்திரம் ஜூலை. 14–
திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் இந்திய மருத்துவ கழகம் சார்பாக பொதுமக்களுக்கான விழிப்புணர்வு இரட்டையர் இறகுபந்து போட்டி ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு இந்திய மருத்துவ கழகம் ஒட்டன்சத்திரம் செயலாளர் மற்றும் அரசு மருத்துவமனை முன்னாள் தலைமை மருத்துவர் டாக்டர்.ஏ.ஆசைத்தம்பி முன்னிலை வகித்தார். போட்டியில் வெற்றி பெற்ற ஒடைப்பட்டி கூட்டுறவு வங்கி முன்னாள் செயலாளர் கணேஷ்குமார், ஆசிரியர் சௌந்தர ராஜன், இந்திய ஆயுள்காப்பீட்டு கழக பழனி பகுதி மூத்த ஆலோசகர் கனகராஜ், ஆசிரியர் பொன்ராஜ், கூட்டுறவுத்துறை துணைப்பதிவாளர் ஓய்வு டேனியல் ஆகியோர்களுக்கு இந்திய மருத்துவ கழகம் ஒட்டன்சத்திரம் துணைத்தலைவர் டாக்டர்.ஏ.முத்துச்சாமி பரிசுகள் வழங்கி பாராட்டினார். விளையாட்டு போட்டிகளை சன்சட்டில் கிளப் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஜெயக்குமார் மற்றும் குழுவினர் நடத்தினர்.

## இலங்கையில் டெங்கு பரவல் தீவிரம்..!




கொழும்பு, ஜூலை. 14–
அண்டை நாடான இலங்கையில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அந்நாட்டில் தீவிரமாக பரவி வரும் டெங்கு காய்ச்சலுக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 1000 பேர் வரை பாதிக்கப்படுவதாக இலங்கை சுகாதார துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

நடப்பாண்டில் (2026–ல்) இதுவரை சுமார் 68,000 பேருக்கும் அதிகமானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும், தற்போது வரை அங்கு டெங்கு காய்ச்சலுக்கு 47 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கொசு கடிக்கு ஆளாகாமல் இருக்க பள்ளி மாணவர்கள் கைகள் மற்றும் கால்களை முழுமையாக மூட கூடிய வகையிலான பொருத்தமான ஆடைகளை அணிய அறிவுறுத்தப்பட்டு உள்ளனர். மேலும் நாடு முழுவதும் கொசுக்களை ஒழிக்கும் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. இதனிடைய டெங்கு பரவல் மிகத் தீவிரமடைந்து வருவதால், நாட்டின் பிரதான மருத்துவமனைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து கடுமையான இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இலங்கை சுகாதாரத்துறையினர் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினர், பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்கவும், தேங்கிக் கிடக்கும் மழைநீரை அகற்றி கொசுப் புழுக்கள் உருவாகும் வாய்ப்புகளை முற்றிலும் குறைக்குமாறும் தீவிர அறிவுறுத்தலை வழங்கி இருக்கிறார்கள்.

# வேலை வாய்ப்பு HPCL–ல் 116 நிரந்தர பணியிடங்கள்!

மத்திய அரசின் மகாரத்னா பொதுத்துறை நிறுவனமான ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (HPCL), 202627 ஆம் ஆண்டுக்கான ஆட்சேர்ப்பில் 116 அதிகாரி நிலை பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்தப் பணியிடங்கள் இந்தியா முழுவதும் நிரப்பப்பட உள்ளன.

இந்த ஆட்சேர்ப்பில் ஜூனியர் எக்ஸிகியூட்டிவ் (கெமிக்கல், ஃபயர் & சேப்டி), சீனியர் ஆபிசர் (விற்பனை), உதவி மேலாளர், மேலாளர், துணைப் பொது மேலாளர், பொது மேலாளர், தலைமை பொது மேலாளர் உள்ளிட்ட பதவிகள் இடம்பெற்றுள்ளன. பதவிக்கு ஏற்ப டிப்ளமோ, பொறியியல் பட்டம், எம்.பி.ஏ., முதுநிலைப் பட்டம் மற்றும் பணி அனுபவம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆன்லைன் விண்ணப்பப் பதிவு ஜூலை 1, 2026 மாலை 4 மணி முதல் தொடங்கியுள்ளது. விண்ணப்பங்களை ஜூலை 20, 2026 மதியம் 3 மணி வரை சமர்ப்பிக்கலாம். தேர்வு முறை பதவிக்கு ஏற்ப கணினி வழித் தேர்வு (CBT), குழு செயல்பாடு, உளவியல் மதிப்பீடு, திறன் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

தேர்வு செய்யப்படுவோருக்கு பதவிக்கு ஏற்ப ரூ.30,000 முதல் ரூ.2,80,000 வரை மாத ஊதியம், அகவிலைப்படி மற்றும் பிற சலுகைகள் வழங்கப்படும். தகுதியும் ஆர்வமும் உள்ளவர்கள் HPCL அதிகாரப்பூர்வ இணையதளத்தின் Careers பக்கத்தில் அறிவிப்பைப் படித்து, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஆன்லைனில் https://www.hindustanpetroleum.com விண்ணப்பிக்குமாறு நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

## கீழக்கரையில் உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!



ராமநாதபுரம், ஜூலை. 14–
ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை சதக்கத்துன் ஜாரியா நடுநிலைப் பள்ளியில் உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை அதிகாரி சுரேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவர்களுக்கு அயோடின் கலந்த உப்பின் அவசியம், அதன் உடல்நல நன்மைகள், உணவு பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளி நிர்வாக அலுவலர் இப்ராஹிம், பள்ளித் தலைமை ஆசிரியை அருட்செல்வி, ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

நிகழ்ச்சியின் முடிவில், மாணவர்களிடம் உணவு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காக உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையினருக்கு பள்ளி நிர்வாகம் நன்றி தெரிவித்தது.

# தொடர்ந்து குறைந்து வரும் தங்கம் விலை!

சென்னை, ஜூலை. 14–
சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400



குறைந்து ரூ.1,05,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 குறைந்து ரூ.13,150–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.235–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## விசாரணை அதிகாரி முன் ஆஜராகாத செந்தில் பாலாஜி!



சென்னை, ஜூலை. 14–

தமிழக வெற்றிக் கழக எம்.எல்.ஏ., இளையராஜாவிடம் பேரம் பேசியது தொடர்பான வழக்கில், முன்ஜாமின் பெற்ற தி.மு.க., முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது சகோதரர் அசோக்குமார் ஆகியோர், காவல் நிலையத்தில் கையழுத்திட ஆஜராகவில்லை. கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை தொகுதி, த.வெ.க., – எம்.எல்.ஏ., இளையராஜாவுக்கு, 35 கோடி ரூபாய் தருவதாக பேரம் பேசியது தொடர்பாக, சென்னையை சேர்ந்த திருநாவுக்கரசு உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பின்னணியில், தி.மு.க., முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது தம்பி அசோக்குமார் இருப்பது, போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.

இது தொடர்பாக, விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என, சென்னை திருவல்லிக்கேணி போலீசார் சம்மன் அனுப்பியும், 'லுக் அவுட் நோட்டீஸ்' வழங்கியும் அவர்கள் ஆஜராகவில்லை.

சென்னை உயர் நீதிமன்றத்தில் இருவரும், முன் ஜாமின் பெற்றனர். இருவரும் விசாரணை அதிகாரி முன், காலை, மாலை என, இரு வேளையும் ஆஜராகி கையெழுத்திட வேண்டும் என, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், செந்தில் பாலாஜி, அசோக்குமார் ஆகியோர், நீதிமன்றம் உத்தரவிட்டு ஐந்து நாட்கள் ஆகியும், விசாரணை அதிகாரி முன் ஆஜராகவில்லை.

போலீசார் கூறுகையில், 'செந்தில் பாலாஜி மற்றும் அசோக்குமார் ஆகியோரின் முன்ஜாமின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என, நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உள்ளோம்' என்றனர்.

## வீரியமிக்க கரோனா பரவல் தமிழகத்தில் இல்லை: பொது சுகாதாரத் துறை!



சென்னை, ஜூலை. 14–

தமிழகத்தைப் பொருத்த வரை கரோனா கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அறுவை சிகிச்சைகளுக்கு முன்னதாகவும், தீவிர சுவாச நோய்கள் உள்ள நோயாளிகளுக்கும் கரோனா பரிசோதனை செய்யும் நடைமுறை தற்போது செயல்பாட்டில் உள்ளது. அதன் அடிப்படையில், கடந்த 2024–இல் 990 பேருக்கும், கடந்த ஆண்டில் 1,250 பேருக்கும், நிகழாண்டில் இதுவரை 335 பேருக்கும் கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு மொத்தமாக பாதிப்பு கண்டறிப்பட்ட 2,575 பேருக்கும், வழக்கமான பரிசோதனைகளில் மட்டுமே தொற்று உறுதியானது. மாறாக, சமூகப் பரவல் ஏற்படவில்லை. அவர்களில் பெரும்பாலானோருக்கு லேசான அறிகுறிகள் மட்டுமே இருந்தன.

இதனிடையே, மகாராஷ்டிர மாநிலம், புணேவில் செயல்படும் தேசிய வைராலஜி நிறுவனம் (என்ஐவி) மேற்கொண்ட மரபணு ஆய்வில், தற்போது பரவி வரும் கரோனா வகை வீரியமற்றது என கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்து அச்சமோ, பதற்றமோ பொது மக்கள் அடையத் தேவையில்லை.

அதே வேளையில், முதியவர்கள், கர்ப்பிணிகள், எதிர்ப்பாற்றல் குறைந்தவர்கள், குழந்தைகள் முன்னெச்சரிக்கையுடன் இருத்தல் வேண்டும். அறிகுறிகள் இருந்தால் மருத்துவமனைகளை நாடி சிகிச்சை பெற வேண்டும்.

கைகளை தூய்மையாக கழுவுதல், தனி நபர் சுகாதாரத்தை கடைப்பிடித்தல் போன்ற பொது சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுவது அவசியம்.

தமிழகத்தில் வீரியமிக்க கரோனா பரவி வருவதற்கான ஆதாரம் எதுவுமில்லை. கடந்த ஆண்டுகளை விட தற்போது பாதிப்பு விகிதம் குறைந்துள்ளது. எனவே, கரோனா தொடர்பான அதிகாரபூர்வமற்ற தகவல்கள் எதையும் நம்ப வேண்டாம் என பொது சுகாதாரத் துறை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

## இன்றைய அரசியலை 36 ஆண்டுகளுக்கு முன்பே கணித்து சொன்ன சோ!



சென்னை, ஜூலை. 14–

74 ஆண்டு கால தமிழக அரசியல் வரலாற்றில், 59 ஆண்டுகளாக கோலோற்றிய திராவிட கட்சிகளின் ஆதிக்கம் முடிவுக்கு வந்துள்ளது.

தி.மு.க., அ.தி.மு.க. என்ற இருபெரும் கட்சிகள், மாறி.. மாறி ஆட்சி செய்து வந்த நிலையில், கட்சி தொடங்கிய 2½ ஆண்டுகளில், தான் சந்தித்த முதல் சட்டசபை தேர்தலிலேயே வெற்றி பெற்று த.வெ.க. ஆட்சி அமைத்துள்ளது. நடந்து முடிந்த 17–வது சட்டசபை தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், 108 இடங்களில் வெற்றி பெற்ற த.வெ.க., கூட்டணி ஆட்சி அமைக்க முயன்றது.

அதே நேரத்தில், இரு துருவங்களாக இருந்த தி.மு.க. – அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகள் பகைமையை மறந்து கைகோர்த்து ஆட்சி அமைக்க முயன்றதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகின.

இதை தி.மு.க. கூட்டணியில் இருந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகமும் உறுதிப்படுத்தினார்கள். இது எப்படி சாத்தியமாகும் என்று பொதுமக்கள் இன்று வரை யோசித்துக் கொண்டிருக்கும் நிலையில், 36 ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் விமர்சகரும், 'துக்ளக்' ஆசிரியருமான சோ, இந்தக் கருத்தை கூறியிருக்கிறார்.

1990–ம் ஆண்டில் 'துக்ளக்' இதழில் வாசகர் ஒருவரின் கேள்விக்கு சோ இவ்வாறு பதில் அளித்து இருந்தார்.

அதாவது, வாசகர் ஒருவர், "தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் கூட்டணி சேருவார்களா?" என்று கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்கு பதில் அளித்த சோ, "நிச்சயமாக வரும் காலத்தில் 2 கட்சிகளும் ஜெயிக்க முடியாத சூழல் உருவாகும். அப்போது கூட்டணி அமைப்பார்கள்" என்று கூறியிருந்தார்.

தற்போது, தி.மு.க. – அ.தி.மு.க. ஆகிய கட்சிகள் கூட்டணி அமைக்கவில்லை என்றாலும், அதுபோன்ற சூழ்நிலை உருவானதை பார்க்கும்போது, சோ ஒரு அரசியல் தீர்க்கதரிசி என்றுதான் சொல்ல வேண்டும்.

## ஹோர்முஸில் கப்பல்களுக்கு பாதுகாப்பு: 20% கட்டணம் வசூல்!!



வாஷிங்டன், ஜூலை. 14–

டிரம்ப் திங்கள்கிழமை வெளியிட்ட 'ட்ரூத்' சமூக ஊடகப் பதிவில், 'ஹோர்முஸ் நீரிணை தொடர்ந்து திறந்தே இருக்கும். ஆனால், ஈரானுக்கு எதிராக மட்டும் கடல்வழி முற்றுகையை அமெரிக்க மீண்டும் அமல்படுத்துகிறது. மற்ற அனைத்து நாடுகளும் இந்நீரிணையை நியாயமான மற்றும் தடையற்ற முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இனிமேல் ஹோர்முஸ் நீரிணையின் பாதுகாவலனாக அமெரிக்கா அறியப்படும். அதேநேரம், உலகின் மிகவும் பதற்றமான இப்பகுதியில் பாதுகாப்பான சூழலை உறுதி செய்வதற்கான செலவுகளுக்கு ஈடாக, இவ்வழியாகக் கொண்டு செல்லப்படும் அனைத்து சரக்குகள் மீதும் 20 சதவீதம் கட்டணம் வசூலிக்கப்படும். இதற்கான செயல்முறைகளும் ஏற்பாடுகளும் உடனடியாகத் தொடங்கப்படும்' எனக் குறிப்பிட்டார்.

## நீட் தேர்வு ஓஎம்ஆர் தாள்களை வெளியிட்டது என்டிஏ!



புதுடெல்லி, ஜூலை. 14–

மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வான நீட் தேர்வு விடைத்தாள்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை தேசியத் தேர்வுகள் முகமை நேற்று வெளியிட்டது. இதன் மூலம், தேர்வர்கள் தங்கள் பதில்கள் குறித்த ஆட்சேபனைகளை ஜூலை 15க்குள் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வினாத்தாள் கசிவு தொடர்பான புகார்களைத் தொடர்ந்து முதலில் நடத்தப்பட்ட தேர்வு ரத்து செய்யப்பட்ட நிலையில், ஜூன் 21 அன்று இத்தேர்வு மீண்டும் நடத்தப்பட்டது. ஒவ்வொரு பதிலுக்கும் ஆட்சேபனை தெரிவிக்க தேர்வர்கள் ரூ. 200 கட்டணம் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருவள்ளூரில் பாய்லர் வெடித்து விபத்து: ஒருவர் உயிரிழப்பு.. 4 பேர் படுகாயம்!



திருவள்ளூர், ஜூலை. 14–

கும்மிடிப்பூண்டி சிப்காடில் உள்ள தனியார் உலோக உருக்கு தொழிற்சாலையில் ராட்சத பாய்லர் வெடித்து விபத்து ஏற்பட்டுள்ளது. பாய்லர் வெடித்ததில் வடமாநில தொழிலாளி ரவி ரஞ்சன்(24) உடல்கருகி உயிரிழந்தார்.அதிக அழுத்தம் காரணமாக பாய்லரின் தலைப்பகுதி சுமார் 50 மீட்டர் தூரம் தூக்கிவீசப்பட்டதாக தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

## ரூ.81,000 கோடி சொத்துக்கள் முடக்கம்; உரிமையாளர்களை தேடும் ஈ.டி. அதிகாரிகள்!



சென்னை, ஜூலை. 14–

ரியல் எஸ்டேட், கட்டுமான நிறுவனங்கள் தொடர்பான வழக்குகளில் தான், அதிக சொத்துக்கள் முடக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. ரியல் எஸ்டேட் துறையில் கருப்பு பணம் அதிகமாக புழங்கும் நிலையில், இத்துறை தொடர்பாக கண்காணிப்பை அமலாக்கத் துறை தீவிரப்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் 16 இடங்களில் அமலாக்கத்துறை ரெய்டு; ரூ.3.35 கோடி கிரிப்டோ கரன்சி சொத்துக்கள் பறிமுதல்

தமிழகத்தில் 16 இடங்களில் அமலாக்கத்துறை ரெய்டு; ரூ.3.35 கோடி கிரிப்டோ கரன்சி சொத்துக்கள் பறிமுதல்

அரசியல்வாதிகள், அதிகாரிகளும் கருப்பு பணத்தை பதுக்க, பினாமிகள் பெயரில் சொத்து வாங்குவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்நிலையில், சமீப காலமாக அமலாக்கத் துறை பதிவு செய்யும் வழக்குகளில், ரியல் எஸ்டேட் சொத்துக்கள் தான் அதிகமாக பிடிபடுகின்றன. இந்த வகையில், 2025 – 26ம் நிதி ஆண்டில், நாடு முழுதும் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில், 81,000 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதாக, அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை சட்டம், திவால் மற்றும் நொடிப்பு நிலை சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில், சொத்துக்களின் உரிமையாளர்கள் குறித்த விபரங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இதில், உரிமையாளர் யார் என்ற விபரங்கள் தெளிவாகாத நிலையில், 81,000 கோடி ரூபாய் சொத்துக்கள் உள்ளதாக தெரியவந்துள்ளது.

## வியட்நாம் படகு விபத்து: ரூ.25 லட்சம் நிதியுதவி அறிவித்த LAVA



வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த 15 இந்தியர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.25 லட்சம் நிதியுதவி வழங்குவதாக LAVA நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த கடினமான நேரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் துணை நிற்பதாக LAVA அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளது.

## அரசு பள்ளிகளில் 6-12-ம் வகுப்பு வரை ஏ.ஐ., காலநிலை அறிவியல் பாடம்?



சென்னை, ஜூலை. 14–

தமிழகத்தில் அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு தகுதி தேர்வு கட்டாயம் என சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு அளித்து உள்ள நிலையில் தமிழகத்தில் தகுதித்தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று பணியில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் தகுதித்தேர்வு எழுதாமல் பணியில் உள்ள ஆசிரியர்கள் தகவல்களையும் முதல்–அமைச்சர் பள்ளிக்கல்வித்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. அரசு பள்ளிகளில் 6 முதல் 12–ம் வகுப்பு வரை செயற்கை நுண்ணறிவு மற்றும் காலநிலை அறிவியல் பாடங்களை கொண்டு வருவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

2031–ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் அனைத்து பள்ளி நவீன வகுப்பறைகளும் 'ஸ்மார்ட் கிளாஸ்' அறைகளாக மாற்றப்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. அரசு பள்ளி ஆசிரியர்களின் தகுதியை மேம்படுத்தும் விதமாக தேர்வு செய்யப்படும் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் பள்ளிக்கல்வியில் சிறந்து விளங்கும் சிங்கப்பூர் மற்றும் பின்லாந்து நாடுகளில் பயிற்சி பெறும் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

அரசு பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவது குறித்தும், அரசு பள்ளி ஆசிரியர்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை திறன் பட கற்றுக்கொள்ள ஏதுவாக செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் கல்வி திறன் மேம்படுத்தும் திட்டம் பற்றி ஆலோசனை மேற்கொண்டதாக தெரிகிறது. பட்ஜெட்டில் பள்ளிக்கல்வித்துறை சார்பாக என்னென்ன புதிய அறிவிப்புகளை இடம்பெறச் செய்யலாம் என்பது பற்றியும் முதல்–அமைச்சர் விஜய் ஆலோசனை மேற்கொண்டார்.

## வியத்நாம் படகு விபத்து: விமானம் மூலம் மும்பை வந்தடைந்த 15 பேரின் உடல்கள்!



வியத்நாம், ஜூலை. 14–

வியத்நாம் படகு விபத்தில் உயிரிழந்த 15 இந்தியர்களின் உடல்கள் விமானம் மூலம் தாயகம் அனுப்பிவைக்கப்பட்டதாக ஹனோயில் உள்ள இந்திய தூதரகம் திங்கள்கிழமை தெரிவித்தது.

வியத்நாமின் ஹோசி மின் நகரிலிருந்து வியத்நாம் ஏர்லைன்ஸ் விமானம் மூலமா அவர்களின் உடல்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த விமானம் மும்பை விமான நிலையத்தைச் சென்றடைந்ததும், அங்கிருந்து அவர்களின் உடல்களை சொந்த ஊர்களுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் என்றும் ஹனோய் இந்திய தூதரகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

மும்பை விமான நிலையம் வரும் விமானத்திலிருந்து தமிழகத்தைச் சேர்ந்தவர்களின் உடல்களைப் பெற்று அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக, தமிழக அதிகாரிகள் குழுவும் மும்பையில் முகாமிட்டுள்ளது.

## தந்தை ராமதாஸ் உடன் அன்புமணி மீண்டும் சந்திப்பு!



சென்னை, ஜூலை. 14–

பாமக நிறுவனரும் தன் தந்தையுமான ராமதாஸை, அன்புமணி ராமதாஸ் மீண்டும் நேரில் சந்தித்துள்ளார். திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் உள்ள ராமதாஸ் இல்லத்தில் வைத்து இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. தந்தையிடம் இருந்து பிரிந்து சென்ற அன்புமணி தற்போது பாமகவின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக உள்ளார். இந்நிலையில் பாமவின் 38 வது ஆண்டுவிழா வரும் ஜூலை 16 ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளது.

இந்த சூழலில் ஆண்டுவிழாவையொட்டி கட்சி பணிகள் குறித்து இன்று தந்தையுடன் அன்புமணி ஆலோசித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

பாமகவின் அடுத்தகட்ட வளர்ச்சி மற்றும் உறுப்பினர் சேர்க்கை குறித்து இருவரும் ஆலோசித்ததாக கூறப்படுகிறது. 2 மணி நேரத்திற்கும் மேலாக அவர்கள் பேசியதாக கூறப்படுகிறது.

அண்மையில் அன்புமணியை சந்தித்த ராமதாஸ் கண்ணீர் மல்க ஆரத்தழுவி வரவேற்றிருந்தார். இந்நிலையில் மீண்டும் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

## ஈரான் ஹிட்லிஸ்டில் உலக தலைவர்கள்?



வாஷிங்டன், ஜூலை. 14–

ஈரானின் உச்ச தலைவராக இருந்த அயதுல்லா அலி கமேனி கடந்த பிப்ரவரி 28 அன்று அமெரிக்க–இஸ்ரேல் கூட்டு தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரின் இறுதிச் சடங்கு 4 மாதங்கள் கழித்து கடந்த வாரம் நடந்து முடிந்தது.

இதனிடையில் அவரது மகன் மொஜ்தபா கமேனி கடந்த மார்ச் 8 இல் புதிய உச்ச தலைவர் ஆனார். ஆனால் அவர் இதுவரை பொதுவெளியில் தோன்றவில்லை. பிப்ரவரி 28 தாக்குதலில் அவரும் காயம்பட்டதாக கூறப்படுகிறது.

அறிக்கைகள் மூலம் மட்டுமே பேசிவரும் மொஜ்தபா, தனது தந்தையின் கொலைக்கு நிச்சயம் பழிதீர்க்கப்படும் என கூறி வருகிறார்.

வரும் ஜூலை 28 அன்று தனது தந்தையின் நினைவேந்தல் நிகழ்வில் அவர் நேரில் பங்கேற்கலாம் என கூறப்படுகிறது.

இந்த சூழலில் ஈரான் அதிகாரிகளால் நடத்தப்படும் ஹம்ஷஹ்ரி என்ற நாளிதழ் இணையத்தில் ஒரு ஹிட் லிஸ்ட் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் அமெரிக்க அதிபர் டிரம்ப் பல உலகத் தலைவர்கள் புகைப்படம் இடம்பெற்றுள்ளது.

ஆரஞ்சு உடை அணிந்த டிரம்ப் மற்றும் இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு ஆகியோரின் புகைப்படங்களில், அவர்கள் நெற்றியில் துப்பாக்கியால் சுடுப்படுவதை குறிக்கும் ஸ்னைப்பர் குறி வரையப்பட்டுள்ளது. இது அவர்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்பதை குறிப்பதாக அர்த்தம் கொள்ளப்படுகிறது.

அவர்களுக்குக் கீழே, ஆரஞ்சு நிற சிறை உடைகளை அணிந்திருப்பது போல மேலும் 11 உலகத் தலைவர்களின் படங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

அவர்களில், பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், பிரான்ஸ் அதிபர் மேக்ரான், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, ஜெர்மனி அதிபர் பெரெட்ரிக் மெர்ஸ், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ, அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலாளர் பீட் ஹெக்செத், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஆகியோர் அடங்குவர்.

டிரம்பைக் கொலை செய்ய ஈரான் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க உளவுத்துறை சமீபத்தில் எச்சரித்திருந்தது.

இதனாலேயே துருக்கியில் நடந்த நேட்டோ மாநாட்டிலிருந்து டிரம்ப் திரும்பும்போது கத்தார் பரிசாக வழங்கிய விமானத்தை மாற்றிவிட்டுப் பழைய விமானத்தில் பயணித்ததாக கூறப்படுகிறது.

மேலும் தனக்கு ஏதாவது நடந்தால் ஈரானை மொத்தமாக அழிக்க அமெரிக்க ராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், இதற்காக 1000 ஏவுகணைகள் தயாராக இருப்பதாகவும் டிரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020